முருகப்பெருமான் துணை

**மகான் தேரையர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.03.2024,** வியாழக்கிழமை

1. முருகனை கும்பிடு முழுமை காண
முக்தி கண்டிட சக்தி கூடவே
தருமத்தை செய்திடும் அரங்கன் வழி
தடையற வந்திட சித்திக்குமே என
2. என அவதார ஞானி அரங்கன்
இணையில்லா பெருமை கூறி
ஞானமுடன் தேரையர் யானும்
நாட்டிடுவேன் சோபகிருது சால் திங்கள்
3. திங்களிலே அறுநான்கு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 24 ம் நாள், 07.03.2024, வியாழக்கிழமை)
தேசிகன் கேட்க துல்லிய ஆசி
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உண்மைபட ஞான வழிகள் தானும்
4. தானுமே தான தரும நெறிபட
தக்க வழிகாட்டலாக இருக்க
ஞானமோடு தருமநெறி காட்டும்
ஞானியர் வழிதனை விட்டகலா
5. அகலா உலகோர் தொடர
ஐம்பொறி புலன்கள் திடமுற
வகையிலா தீவழிச் செல்லா
வள்ளல் நெறி வழி கிடந்து
6. கிடந்துமே பிறஉயிர் களுக்கு
குறைவின்றி தன்னாலியன்ற
தடையற சேவை ஆற்றுகின்ற
தனிப்பெருந் தயவு பெருகி
7. பெருகியே ஞானவான்களாக
பிரம்ம ரகசியம் அறிகின்ற
முருகப் பெருமான் ஆசிபெற்ற
முழுமை கண்ட மக்களாக

8. மக்களாகத் தேறி சிறந்து
மண்ணுலகை காக்க வல்ல
ஆக்கப் பணிகளாம் அரசியலில்
ஆன்மீக அரசியல் களமாக

9. களமாகப் பதிவு செய்து
கறைபடிந்த தலைமைகளை
பலமிலா விரட்டி அகற்றி
பாதுகாப்பாக மக்களை காக்கும்

10. காக்கும் ஞானவான்களுக்கு
கந்தவேலன் ஆசிபட துணை
ஆக்கமோடும் ஊக்கமோடும் செய்து
அகிலத்தில் ஞானத் தலைமை படைத்து

11. படைத்துமே உலகமாற்றத்தை
பாடிடுவேன் அரங்கன் ஆசிபெற்ற
படைகளாக இணைந்து நிகழ்த்துவர்
புகன்றிட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–